இங்கே அமர்ந்து இந்த சட்டமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அதைப் பேரவைக் குறிப்பேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளையும் ஆலோசனைகளையும் தெரிவித்தபின் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் ஆதிதிராவிட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி கண்டிட அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளையும், இனி செயல்படுத்த உள்ள திட்டங்களைப் பற்றியும் எனது பதிலுரையில் இப்பேரவைக்குத் தெரிவிக்கிறேன் எனக் கூறி அமர்கிறேன்.

3. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர் திரு. ச. அழகிரி கைது செய்யப்பட்டிருப்பதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. விவாதத்திற்குமுன், பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தென் ஆற்காடு மாவட்டக் காவல் துறை அதிகாரிகளிடமிருந்து கீழ்க்கண்ட தகவல் வரப்பெற்றுள்ளது:

"Thiru K.S. Alagiri, Member of Legislative Assembly, Chidambaram Assembly Constituency has been arrested at about 15.00 Hours at Bhuvanagiri Town, Chidambaram Taluk Today (3-5-1995) by Bhuvanagiri Police on Preventive Measures. A case has been Registered in Bhuvanagiri Police Station Crime No.270/1995 Under Section 151, Cr. P.C. R/w 7(1)(a) CLA Act. He has been sent for remand."

@ 667 முதல் 726 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

எல்லோரையும் கைது செய்து விட்டார்கள் என்று வெளியிலே ஒரு பெரிய செய்தியைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், இவ்வாறு பிரிவென்டிவ் அரெஸ்ட் ஆக கைது செய்யப்பட்டு இருப்பது மூவரே மூவர்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்; எஞ்சிய உறுப்பினர்கள் எல்லாம் நடமாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

2. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 30–பழங்குடியினர், ஆதி-திராவிடர் முதலியோர் நலன்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. திரு. ஆர். சிங்காரம்.

முற்பகல் 10-35

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நான் 1989-லே இருந்து சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். இந்த மாமன்றத்திலே இதற்கு முன் இருந்தவர், சபாநாயகராக இருந்தவர் எப்படி இந்த சட்டமன்றத்தில் நடந்துகொண்டார் என்பதையும் இந்த மாமன்றத்திலே இருக்கின்ற தாங்கள் இந்த சட்டமன்றத்திலே எப்படி நடந்துகொள்கிறீர்கள் என்பதையும் பாரபட்சம் இல்லாமல் நான் தெரிந்திருக்கின்றவன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே இருந்த சபாநாயகர் இதே பேரவையினுடைய அவைக் குறிப்பிலே இருக்கிறது, நான் பலமுறை என்னுடைய உரிமையை, பேசுகின்ற வாய்ப்பைக் கேட்கின்றபோது, வாய்ப்பு எனக்கு வலுக்கட்டாயமாக மறுக்கப்படும். அதை மீறி நான் எழுந்து நின்றபோது, ‘சிங்காரம் உன்னை ஜென்மத்துக்கும் விடமாட்டேன்’ என்றெல்லாம் இந்த அவையிலே பேசியிருக்கிறார். ஒருமைப்பாடாக. ‘சிங்காரம், உன்னை ஜென்மத்துக்கு விடமாட்டேன்’